பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 15 திங்கட்கிழமை 30.12.2024 கதிர் 053

**இனி இது ரகசியம் அல்ல!**

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர ஹிரோஷன லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் ☞2

## இனவிடுதலைக்காகவே சேர்ந்தோம் பதவிக்காகக் கட்சியில் சேரவில்லை

### சிறீதரன் எம்.பி. கிளிநொச்சியில் தெரிவிப்பு

இனவிடுதலைக்காகவே ஒன்றிணைந்துள்ளோம். பதவியைப் பிடிப்பதற்காக கட்சியில்இணையவில்லை.ஒன்றுசேரவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

அவர் நேற்று கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.அவர்மேலும்தெரிவித்ததாவது:

கட்சியில் உள்ளவர்களுக்கு வெவ்வேறு ஆசைகளும்,எண்ணங்களும் இருக்கலாம். ஆனால் நாங்கள் இனவிடுதலைக்காகவே ஒன்றிணைந்துள்ளோம். பதவியைப் பிடிப்பதற்காக கட்சியில் இணையவில்லை. ஒன்றுசேரவில்லை.

நான் அவ்வாறு பதவியைப் பிடிக்கும் நோக்கத்தில் இருந்திருப்பேனாக இருந்தால் வழக்குகளை தாக்கல் செய்து கட்சியை ஆட்டம்காணவைத்திருக்கமுடியும். ஆனால் அதுவல்ல எமது நோக்கம்.

கட்சிப் பிரச்சினைகள் தீர்வுக்கு வரும், உடன்பாட்டுக்குச்செல்வோம். ஒற்றுமையாக செல்லவேண்டும். அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும்.

கட்சியென்றால்நல்லதுகெட்டதுஇருக்கும். அனைவரும் சேர்ந்து பயணிக்க ☞2

## மனுஷவின் சகோதரருக்கு விளக்கமறியல்

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை நேற்றையதினம் கம்பஹா நீதவான்நீதிமன்றில்முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பின்லாந்துநாட்டில்தொழில்வாய்ப்பை பெற்று தருவதாக வாக்குறுதியளித்து, 40 இலட்சம் ரூபா பணம் கேட்டு அதில் ☞2

## நேபாளம் சென்றார் ரணில் விக்கிரமசிங்க

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றைய தினம் நேபாளத்திற்குப் பயணமாகியுள்ளார்.

தனிப்பட்ட பயணமாக அவர் காத்மண்டு ட்ரிபுவன் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார் என்று நேபாள வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கிருஷ்ண பிரசாத் தெரிவித்தார்.

முன்னாள்ஜனாதிபதிஎன்றவகையில் அவருக்குத்தேவையானநெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ☞2

## இந்திய மீனவர் ஊடுருவலைத் தடுக்க 2016இல் எட்டப்பட்ட இணக்கமே தீர்வு

### மீனவர் சங்கப் பிரதிநிதி தெரிவிப்பு

இந்தியமீனவர்கள்இலங்கைக்கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடிக்கும் பிரச்சினை தொடர்பில் இரு நாட்டு மீனவர்களுக்கும்இடையில் 2016ஆம் ஆண்டு காணப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்தினாலேயே தீர்வு எட்டப்பட்டுவிடும் என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச உப தலைவர் வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

அவர் வடமராட்சியில் செய்தியாளர்களிடம் பேசியபோது, தமிழ்நாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் இந்தப் பிரச்சினை குறித்துத் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்தார்.

இந்தியா இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்று ஹக்கீம் தெரிவித்திருந்தார். இந்தப் பிரச்சினை குறித்து இனி இரு நாடுகளுக்கும் ☞2

## சஜித்தின் தலைமை தொடர்பில் மனோ கணேசன் விமர்சனம்

சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவம் சம்பந்தமான கேள்விகள்இருக்கின்றனஎன்றுதமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சிநிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவபாறு தெரிவித்தார்.

''ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாசவா, ஹர்ஷ டி சில்வாவா அல்லது வேறு ஒருவராநீடிக்கப்போகின்றார்என்பதில் கேள்விகள் உள்ளன. அதற்காகப் பொறுத்திருந்துதான்பார்க்கவேண்டும். ஆனால் காலம் கனிந்துவிட்டது.

சஜித்பிரேமதாசதனதுதலைமைத் துவப் பாங்கினை இன்னமும் வளர்த்துக்கொள்ளவேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்குள் கூட்டுச் செயற்பாடு இல்லையென்று தான் நான் கருதுகின்றேன். தனித்து முடிவுகள்எடுக்கப்படுகின்றன. ஆகவே சஜித் பிரேமதாச தன்னை மாற்றிக்கொள்ளவேண்டும். ☞2

## தகுதிவாய்ந்த மருந்தாளர்களின்றி மருந்தகங்கள் மூடப்படும் அபாயம்

தேசியமருந்துகள்ஒழுங்குபடுத்தும் அதிகார சபையானது மருந்தகங்களின் செயற்பாட்டிற்கு தகுதிவாய்ந்த மருந்தாளரின் முழுநேர இருப்பை கட்டாயமாக்கியுள்ளதால்,நாடுமுழுவதும் உள்ள மருந்தகங்கள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொள்கின்றன என்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இந்த விடயத்தைப் பற்றி கலந்துரையாடுவதற்காக அமைச்சரைத் தொடர்பு கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பல முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றும் இதனால் ஜனவரியில் நிலைமை மோசமடையும் என்றும் அச்சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சண்டிக கங்கந்த இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

தேசியமருந்துகள்ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் அறிவிப்பால் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றி கலந்துரையாடுவதற்காக அமைச்சர் மற்றும் தொடர்புடையவர்களைச் சந்திப்பதற்குநாங்கள்கோரிவருகிறோம், ஆனால் எங்களுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

குறித்த முடிவினால் ஏற்பட்டுள்ள எதிர்மறையான தாக்கத்தை ☞2

## சிகிரியாவைப் பாதுகாக்க கொரிய நிறுவனம் திட்டம்

உலகப் பாரம்பரியச் சின்னமாக விளங்கும் சிகிரியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், சுற்றுலாப்பயணிகளைகவரும்வகையில் சிறப்புத் திட்டத்தை செயல்படுத்தவும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் முன்மொழிந்துள்ளது.

சிகிரியா பாறைக்கு அணுகு சாலை மேம்பாடு, மாற்று அணுகு சாலை அமைத்தல், சிகிரி அருங்காட்சியகம், உணவகம் மற்றும் பற்றுச்சீட்டு பெறும் இடம் உள்ளிட்ட பல திட்டங்கள் உள்ளன.

இந்த திட்டத்தின் மொத்த மதிப்பு 2.4 பில்லியன் ரூபாவாகும்.

அதன்படி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் ☞8

## மியன்மார் அகதிகளை சந்திக்க அனுமதி கேட்கிறது மனித உரிமை ஆணைக்குழு

நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மியன்மார் அகதிகளின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக அவர்களைச்சந்திக்க அனுமதி வழங்குமாறுஇலங்கைமனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி எல். டி. பி.தெஹிதெனிய ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்கவிடம் எழுத்து மூலம் இது தொடர்பான கோரிக்கையை விடுத்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அண்மையில் மியான்மாரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மீட்கப் பட்டனர்.

படகில் இருந்த 12 பணியாளர்கள்நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர், மீதமுள்ளவர்கள் முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இந்த அகதிகளிடம் விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு டிசெம்பர் 26 முலத்தீவு விமானப்படை முகாமுக்கு சென்றிருந்தனர்.

எவ்வாறாயினும், குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அனுமதியின்றி அகதிகளை பார்வையிட அனுமதிவழங்கமுடியாதுஎன விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அகதிகளை சந்திக்க எவருக்கும் அனுமதி வழங்கக்கூடாது ☞8

## அரச அதிகாரிகளுடன் போராடவேண்டியுள்ளது

### கைத்தொழில் அமைச்சர் ஹந்துநெத்தி காட்டம்

ஆட்சியில் அமர்வதற்கு முன்னதாக மக்களின் உரிமைகளுக்காகவீதியில்இறங்கிப் போராடவேண்டியிருந்த தேசிய மக்கள் சக்திக்கு தற்போது தனது கொள்கைகளைப்பாதுகாப்பதற்காக அரச அதிகாரிகளுடன் போராடவேண்டியுள்ளது என்று கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி ☞2

## நாடாளுமன்றத் தேர்தலின் செலவு அறிக்கை சமர்ப்பிக்காதோர் விவரம் பொலிஸ் நிலையங்களுக்கு

பொதுத் தேர்தலில் வருமானம் மற்றும் செலவு அறிக்கைமைர்ப்பிக்காத வேட்பாளர்கள் தொடர்பிலான தகவல் அடங்கிய ஆவணத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்புமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்பின்னர், பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

நவம்பர் 14 இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 8,361 வேட்பாளர்களில் 7,412 பேர் மாத்திரமே வருமானம் மற்றும் செலவு விவரங்களைக் கையளித்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சுயேச்சை குழுக்களாகப் போட்டியிட்ட 197 வேட்பாளர்கள் இன்னும் அந்த அறிக்கையைக் கையளிக்கவில்லை. வருமானம் மற்றும் செலவு விவரங்களைக் கையளிப்பதற்கான காலம் டிசெம்பர்6நள்ளிரவு12மணியுடன் நிறைவு பெற்றது.

உரிய வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ள வேட்பாளர்களின் அறிக்கையின் தகவல்கள் தொடர்பில் ஏதேனும் ☞8

## இனி இது .....

வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்த செய்தி.

ரணிலின் ஆட்சிக் காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஆளும்தரப்புக்குத் தாவியவர்தான் மனுஷ. ஐக்கிய மக்கள் சக்தி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்த கட்சி. ஆனாலும் மக்கள் ஆதரவு அதற்கே இருந்தது. 2020 பொதுத் தேர்தலில் ஐ.தே.க. ஒரு இடத்தைக்கூடப் பெறமுடியவில்லை. அப்போது சஜித்துடன் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களானவர்கள் மனுஷவும் ஹரின் பெர்னாண்டோவும் ரணில் ஜனாதிபதியானதும் ஆளும்தரப்புப் பக்கம் தாவினார்கள். அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டன.

இவர்கள் இருவரையும் வைத்து ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தன் பக்கம் கவர்ந்திழுத்துவிட முடியும் என்று ரணில் ஒரு கணக்குப்போட்டார். அவருக்கு ஆதரவான ஊடகங்கள் மூலமாக, இதோ 50 எம்பிக்கள் மாறுகிறார்கள், 20 பேர் மாறுகிறார்கள், 10 பேர் உடன் வருகிறார்கள் என்றெல்லாம் பரப்புரைப் பேரே நடத்திப் பார்த்தார். ஆனால் மனுஷ, ஹரின் தவிர வேறு எவரும் ரணிலை ஏறெடுத்தும் பார்க்கவில்லை ஐக்கிய மக்கள் சக்தித் தரப்பிலிருந்து.

இப்போது அந்த மனுஷவின் சகோதரரே இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார். விவகாரம் அத்தோடு முடிந்துவிடும் போன்று தெரியவில்லை. இந்த வழக்கோடு மனுஷவின் பெயரும் இழுக்கப்பட்டு அவரும் வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளக்கூடும் என்கின்றன தகவலறிந்த வட்டாரங்கள். அதற்குக் கட்டியம் கூறுவது போன்று நேற்றைய சிங்கப் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வளாகம் மற்றும் நாரஹேன்பிட்டியில் உள்ள தொழில் அமைச்சுக்கு சொந்தமான கட்டடம் மற்றும் தரைத்தளம் ஆகியவற்றை பயன்படுத்தி மனித கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் அமைச்சராக இருந்த காலத்தில் மனுஷவால் பயன்படுத்தப்பட்டது. தனது நாடாளுமன்றப் பதவியை இழக்கும் வரை வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சராகவே அவர் பதவி வகித்தார்.

இந்நிலையில், மனுஷ நாணயக்காரவுக்கு நெருங்கிய மேலும் சில தரப்புகளிடமும் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தி கூறுகின்றது. வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் மோசடியுடன் முன்னாள் அமைச்சரைத் தொடர்புபடுத்த அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்றே தெரிகிறது.

மனுஷ நாணயக்காரவின் இணைப்புச் செயலாளராக இருந்த பாக்ய காரியவசம் என்ற நபரை இலக்கு வைத்தும் பொலிஸார் விசாரணைகள் தொடங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர், இஸ்ரேல் மற்றும் தென்கொரிய வேலைகளை பெற்று தருவதாக கூறி சட்டவிரோதமாக பணம் சம்பாதித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளராக இருந்த தேசப்பிரிய லியனகே என்பவரும் இந்த மனித கடத்தலில் தொடர்புள்ளவர் என்று அறியப்படுவதாகவும் சிங்களப் பத்திரிகை தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

தென்கொரியாவுக்கான விசா தொடர்பில் தற்போதைய ஆளும்தரப்பு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் மனுஷவைச் சுற்றி பிரச்சினைகள் எழத் தொடங்கியிருக்கின்றன. அந்தக் குழப்பத்திற்கும் மனுஷதான் காரணம் என்று சொல்லப்படுகின்றது. அதனால் பல டசின் கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர ஹிரோஷன லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்த செய்தி.

ரணிலின் ஆட்சிக் காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஆளும்தரப்புக்குத் தாவியவர்தான் மனுஷ. ஐக்கிய மக்கள் சக்தி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்த கட்சி. ஆனாலும் மக்கள் ஆதரவு அதற்கே இருந்தது. 2020 பொதுத் தேர்தலில் ஐ.தே.க. ஒரு இடத்தைக்கூடப் பெறமுடியவில்லை. அப்போது சஜித்துடன் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களானவர்கள் மனுஷவும் ஹரின் பெர்னாண்டோவும் ரணில் ஜனாதிபதியானதும் ஆளும்தரப்புப் பக்கம் தாவினார்கள். அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டன.

இவர்கள் இருவரையும் வைத்து ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் தன் பக்கம் கவர்ந்திழுத்துவிட முடியும் என்று ரணில் ஒரு கணக்குப்போட்டார். அவருக்கு ஆதரவான ஊடகங்கள் மூலமாக, இதோ 50 எம்பிக்கள் மாறுகிறார்கள், 20 பேர் மாறுகிறார்கள், 10 பேர் உடன் வருகிறார்கள் என்றெல்லாம் பரப்புரைப் பேரே நடத்திப் பார்த்தார். ஆனால் மனுஷ, ஹரின் தவிர வேறு எவரும் ரணிலை ஏறெடுத்தும் பார்க்கவில்லை ஐக்கிய மக்கள் சக்தித் தரப்பிலிருந்து.

இப்போது அந்த மனுஷவின் சகோதரரே இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார். விவகாரம் அத்தோடு முடிந்துவிடும் போன்று தெரியவில்லை. இந்த வழக்கோடு மனுஷவின் பெயரும் இழுக்கப்பட்டு அவரும் வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளக்கூடும் என்கின்றன தகவலறிந்த வட்டாரங்கள். அதற்குக் கட்டியம் கூறுவது போன்று நேற்றைய சிங்கப் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வளாகம் மற்றும் நாரஹேன்பிட்டியில் உள்ள தொழில் அமைச்சுக்கு சொந்தமான கட்டடம் மற்றும் தரைத்தளம் ஆகியவற்றை பயன்படுத்தி மனித கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் அமைச்சராக இருந்த காலத்தில் மனுஷவால் பயன்படுத்தப்பட்டது. தனது நாடாளுமன்றப் பதவியை இழக்கும் வரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சராகவே அவர் பதவி வகித்தார்.

இந்நிலையில், மனுஷ நாணயக்காரவுக்கு நெருங்கிய மேலும் சில தரப்புகளிடமும் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தி கூறுகின்றது. வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் மோசடியுடன் முன்னாள் அமைச்சரைத் தொடர்புபடுத்த அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்றே தெரிகிறது.

மனுஷ நாணயக்காரவின் இணைப்புச் செயலாளராக இருந்த பாக்ய காரியவசம் என்ற நபரை இலக்கு வைத்தும் பொலிஸார் விசாரணைகள் தொடங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர், இஸ்ரேல் மற்றும் தென்கொரிய வேலைகளை பெற்று தருவதாக கூறி சட்டவிரோதமாக பணம் சம்பாதித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளராக இருந்த தேசப்பிரிய லியனகே என்பவரும் இந்த மனித கடத்தலில் தொடர்புள்ளவர் என்று அறியப்படுவதாகவும் சிங்களப் பத்திரிகை தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

தென்கொரியாவுக்கான விசா தொடர்பில் தற்போதைய ஆளும்தரப்பு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் மனுஷவைச் சுற்றி பிரச்சினைகள் எழத் தொடங்கியிருக்கின்றன. அந்தக் குழப்பத்திற்கும் மனுஷதான் காரணம் என்று சொல்லப்படுகின்றது. அதனால் பல டசின் கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியது முக்கியமானதாகும். ஒருவரை வெளியேற்றி அல்லது ஒதுக்கி வைத்துச் செல்ல முடியும். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை.

அனைவரையும் அரவணைத்துச் செல்லவேண்டும் என்பதற்கான எனது சிந்தனையைச் சிலர் எனது பலவீனமாகக் கருதிக்கொண்டார்கள். பொறுமை காப்பதை பலவீனமாக நினைகின்றார்கள்.

கடந்த காலங்களில் நாங்கள் கண்ட சவால்களும், மாற்றங்களும் முக்கியமானவை. அந்த அனுபவங்களையும் வரலாற்றுப் பாடங்களையும் வைத்துக்கொண்டு கட்சிக்கு உள்ளேயும் சரி கட்சிக்கு வெளியேயும் சரி சவால்களை எதிர்கொண்டு எமது பயணங்களை மேற்கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றார்.

## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற 'ஷில்பாபிமானி' ஜனாதிபதி விருதுகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள், வீண்விரயம், கொள்ளை, மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராகவும், ஆளும்தரப்புகளின் தவறான செயல்களை விமர்சித்தும் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தினோம். இப்போது, மக்களுக்கு எதிராக செயற்பட்டு, நிவாரணம் வழங்காமல், அவர்களின் உரிமைகளை மீறும் வகையில், முன்னாள் ஆளும்தரப்பின் கொள்கைகளின்படி செயற்பட்டு முடிவுகளை எடுக்கும் அரச அதிகாரிகளுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது.

கடந்த காலத்தின் ஆளும்தரப்பில் காணப்பட்ட பழைய நடைமுறைகளை அகற்றுவதில் அவர்களுக்கு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவர்கள் மக்களின் ஆணையின் அளவையும் தன்மையையும் உணரவில்லை. முந்தைய ஆளும்தரப்புகளில் அவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர் என்பதை அவர்கள் உணர்வது கடினமான காரியமாகிறது.

கடந்த காலங்களில் அரச அதிகாரிகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, தேசிய பொருளாதாரம், உள்ளூர் தொழில்கள் போன்றவற்றை வலுப்படுத்தும் முடிவுகளை எடுக்கவில்லை. மாறாக வெளிநாட்டு சக்திகள், இறக்குமதியாளர்கள் மற்றும் சர்வேதச நிறுவனங்களை வலுப்படுத்தும் முடிவுகளை மட்டுமே எடுத்துள்ளனர். அதற்கேற்ப வரிக் கொள்கைகளை அவர்கள் எடுத்துள்ளனர்.

அந்த தீர்மானங்கள் திட்டங்கள் சம்பந்தமாக அரச அதிகாரிகள் இன்னும் எங்களுடன் வாதிடுகின்றனர். அவர்கள் எடுத்த முடிவுகளுக்காக எங்களுடன் சண்டையிடுகிறார்கள். தற்போது நாம் நிதி அமைச்சு வரிக் கொள்கை போன்றவற்றுடன் போராடவேண்டியுள்ளது. எனினும் எமது போராட்டம் மக்களுக்கானது. அவர்கள் அளித்துள்ள ஆணைக்கானது என்றார்.

## நேபாளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத்திற்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அவர் பலரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

## சஜித்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுமட்டுமன்றி கட்சிக்குள் ஹர்ஷ, கபீர் போன்ற மூத்த உறுப்பினர்கள் உள்ளனர். ஆகவே கட்சியின் தலைவர் யார் என்பதை நாம் அவதானிப்போம். அவர்கள் தெரிவுசெய்யப்போகும் நபர் பற்றி ஆழமாகப் பரிசீலிப்போம் - என்றார்.

## மனுஷவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

## தகுதிவாய்ந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துகொள்ளவேண்டும். நாடளவியரீதயில் செயற்படும் மருந்தகங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. பொதுமக்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள நோயாளிகள் பிரச்சினைகளுக்க முகங்கொடுகின்றார்கள்.

கிராமப்புறங்களில் உள்ள மருந்தகங்கள் மூடப்படுவது அப்பகுதிகளில் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு இடையூறாக உள்ளது, ஏனெனில் அம்மக்கள் மருந்துகளைப் பெற கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆகவே இந்தவிடத்தில் எந்தநடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால் இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்து மோசமடையும் ஆபத்துள்ளது.

மருந்தாளரின் பதிவு முறையை அகற்றுவதல்லஎமது கோரிக்கை, தகுதிவாய்ந்த மருந்தாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே எமது கோரிக்கையாகும்.

நாடு முழுவதும் தற்போது செயற்பாட்டில் உள்ள 5,100 மருந்தகங்களில், தகுதிவாய்ந்த மருந்தளர்கள் பற்றாக்குறையால் பல மருந்தகங்கள் மூடப்படும் நிலைமையில் உள்ளன.

அத்தோடு தகுதிவாய்ந்த நபர்கள் வெளியேறுவதால் நாட்டில் மருந்தாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. நவம்பர் மாத நிலவரப்படி, இலங்கை மருத்துவ கவுன்சிலின் மீளாய்வுக்கு அமைவாக 6,700 மருந்தாளர்கள் மட்டுமே செயற்பாட்டில் உள்ளனர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைசட்டத்தின்படி, மருந்துகள், மருத்துவசாதனங்கள் அல்லது தயாரிப்புகளை விநியோகிப்பது ஒரு மருந்தாளர் அல்லது ஒரு பதிவுசெய்யப்பட்ட பயிற்சி மருந்தாளரால் தலைமை மருந்தாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றுள்ளது.

தகுதிவாய்ந்த மருந்தாளர்களைப் பணியமர்த்துவதற்கான தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் எதிர்பார்ப்பு நியாயமானதாக இருந்தாலும், தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமில்லை.

மருந்தாளுநர்களுக்கான தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் விண்ணப்பத்தில், இலங்கை மருத்துவச் சபையால் வழங்கப்படும் மருந்தாளர் தகுதி அல்லது செயற்திறன் சான்றிதழ் அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மருந்தாளர்களுக்கான பரீட்சையில் 5 சதவீமானவர்களே தேர்தச்சி பெறுகிறார்கள் என்றார்.

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் பேச்சுக்கள் நடத்தப்படாது என்று இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்திருந்த நிலையில் ஹக்கீமின் கருத்து வெளியாகி இருந்தது.

அதற்குப் பதிலளித்த வர்ணகுலசிங்கம், இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலும் ஏற்கனவே பல தடவைகள் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. 2016 நடந்த பேச்சில் இணக்கமும் எட்டப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்தினாலே இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றார்.

அத்துடன் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அருச்சுனாவைச் சந்தித்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் உண்மையான மீனவர்கள் இல்லை என்றும் அவர்கள் கடந்த அரசுக் காலத்தில் அமைச்சரால் மீனவர் சங்கங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவித்தார். முன்னாள் அமைச்சர் தனக்கு வேண்டியவர்களையும், தமது கட்சி உறுப்பினர்களையுமே அந்தப் பதவிகளுக்கு நியமித்திருந்தார். அவர்களே இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவைச் சந்தித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## மியன்மார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் உத்தரவிட்டுள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கமைய குறித்த கோரிக்கைக்கு பதிலளித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், புகலிடக்கோரிக்கையாளர்களை அணுகுவதற்கு அனுமதி வழங்குவது தமது திணைக்களத்தின் ஊடாக அன்றி, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சின் ஊடாகவே எனத் தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவரினால் வாய்மொழியாக இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும், குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் இது தொடர்பில் எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கவில்லை எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் மூலமோ அல்லது வேறு வகையிலோ தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை தொடர்ந்தும் பரிசோதிக்கும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முகாமில் உள்ள அகதிகளில் 40 இற்கும் அதிகமானோர் சிறுவர்கள் எனவும் அவர்களில் பெரும்பாலானோர் கைக்குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்படுவதால், இது தொடர்பில் ஆராய வேண்டிய பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இருக்கிறது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை சாஹிராவுக்கு பேருந்து வாங்க 'ஸஹ்ரியன்ஸ் லயன்ஸ்' ரூ. 8.5 லட்சம் நிதி

(ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு பாடசாலைக்கு பஸ் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக கல்முனை சாஹிரா பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களான ஸஹிரியன்ஸ் லயன்ஸ் 2003 - 2006 பிரிவினர் பாடசாலைக்கு எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் (850,000) ரூபா பெறுமதியான காசோலையை நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிரிடம் கையளித்தனர்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டைக் கொண்டாடும் முகமாக பாடசாலையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் அது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் வகுக்கப்பட்டு இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் பாடசாலைக்கு பஸ் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக இத் தொகையை வழங்கிய 2003 - 2006 ஸஹ்ரியன்ஸ் லயன்ஸ் பிரிவினருக்கு பாடசாலையின் சமூகம் சார்பாக அதிபர் இதன் போது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து, அவர்களுக்கு சான்றிதழ் வழங்கியும் கௌரவித்தார்.

இதுபோன்று இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் மற்றும் கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் தங்களால் முடியுமான பங்களிப்பை வழங்கி, வெகு விரைவில் இப்பாடசாலைக்கு ஒரு பஸ் வண்டியினைப் பெற்றுக்கொள்ள தங்களால் முடியுமான உதவிகளைச் செய்ய முடியும் என்றும் தனது உரையின்போது அதிபர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் என்.எம்.றிஸ்மிர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவிச் செயலாளர் எம்.ஐ.எம். றியாஸ் உட்பட பிரதி, உதவி அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பெயர்ப் பலகையை மாற்ற மக்கள் கோரிக்கை

(கேதீஸ்)



தலவாக்கலை பஸ் நிலைய கட்டடத்தில் பொருத்தப்பட்டுள்ள பிரதான பெயர் பலகை உடைந்து பல மாதங்களாகியும் அதற்கு பதிலாக புதிய பெயர் பலகையை பொருத்துவதற்கு இதுவரை பொறுப்பானதிணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என தலவாக்கலை பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் பஸ் நிலைய கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த பிரதான பெயர் பலகையில் எழுத்துக்கள் அச்சிட்டு காணப்பட்ட பெனர் கிழிந்து தொங்குகின்றது. பெயர் பலகையின் பின்புறம் மட்டும் எஞ்சியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் காணாமல் போய்விட்டன எனவும் மக்கள் கூறுகின்றனர்.

இதனால் வெளியூர்களிலிருந்து தலவாக்கலை நகருக்கு வரும் பயணிகள், சாரதிகள் மற்றும் ஏனைய பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும், பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள பிரதான பெயர் பலகையை விரைவில் சரி செய்யுமாறு தலவாக்கலை நகர வாசிகள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இளைஞனிடம் மேலதிக விசாரணை

(பாறுக் ஷிஹான்)

ஐஸ்போதைப்பொருளுடன் கைதான இளைஞனிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் கடந்த சனிக்கிழமை இரவு களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது நிந்தவூர் 07 பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 2 கிராம் 580 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன் சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மற்றும் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அறிவு ஒளி மையத்தின் இலவச கல்விச் சுற்றுலா

(ஹஸ்பர்)

திருகோணமலையில் இயங்கி வரும் பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் இலவச கல்விச் சுற்றுலா அறிவு ஒளி மையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் பொழுது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டிகளை ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்த நிகழ்வின் பொழுது ரவிகரன் மாணவர்களுக்கு கல்வி இலவசமாக ஏற்பாடு செய்யப் பட்டு தந்த நிர்வாகத்திற்கு பாராட்டுக்களைத் தெரிவித்த தோடு மாணவர்களுக்கு ஏதேனும் தேவைகள் இருப்பின் அவற்றை தாம் சிறப்பாக செய்து தருவதாகவும் வடக்கு கிழக்கு தமிழ் மாணவர்கள் கல்வியில் மேண்மையை அனைத்து விதமான உதவிகளையும் தாம் செய்யத் தயார் என்றும் மாண வர்களிடத்தில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வை சிறப்பாக அறிவு ஒளி மையத்தின் நிறுவனர் உதயகுமார் அஜித் குமார் மற்றும் நிர்வாகச் செயலாளர் புகழ் வேந்தன் டிலக்ஷிகா ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்து தந்தனர். மேலும் விவேகானந்தா மீனவர் சங்கம் சார்பில் இளங்கோவன் ஜெயவதணி மற்றும் அண்ணா மீனவர் சங்க சார்பில் நிவாஸ் ஆகியோர் பங்கு கொண்டனர்.





# கல்முனை ஸ்ரீ சுபத்ரராம மகா விகாரையில் அன்னதான மடம்

(பாறுக் ஷிஹான்)





ஜனாதிபதி செயலகத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் முன்னாள் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் வேண்டுகோளுக்கிணங்க நிர்மாணிக்கப்பட்ட கல்முனை ஸ்ரீசுபத்ராராம மகா விகாரையின் அன்னதான மண்டப திறப்பு விழா சனிக்கிழமை கல்முனை பிரதேச செயலாளர் டி.எம்.எம்.அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

மேலும் இந் நிகழ்வில் கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக கல்முனை விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்தன தேரர், மணிக்கமடு ரஜமகா விகாராதிபதி சிலரத்தன தேரர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான எஸ்.விஜிகரன், கே.எல் சபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுமார் 5 மில்லியன் ரூபா நிதியில் இவ் அன்னதான கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நகை முரண்

ஆட்சியில்அமர்வதற்குமுன்னதாகமக்களின்உரிமைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடவேண்டியிருந்த தேசிய மக்கள் சக்திக்கு தற்போது தனது கொள்கைகளைப் பாதுகாப்பதற்காக அரச அதிகாரிகளுடன் போராடவேண்டியுள்ளது என்று கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்திருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் மக்கள் விரும்பிய ''பொறிமுறை மாற்றத்தை'' காண முடியவில்லை என்ற விமர்சனங்கள் வலுத்துவரும் பின்னணியில் அமைச்சரின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது. அதாவது மாற்றத்தை நிகழ்த்துவதற்கு அதிகாரிகளே தடையாக இருக்கின்றார்கள் என்று பழிப்போடப்பார்க்கின்றார் அமைச்சர்.

''நாங்கள், வீண்விரயம், கொள்ளை, மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராகவும், ஆளும்தரப்புகளின் தவறான செயல்களை விமர்சித்தும் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தினோம். இப்போது, மக்களுக்கு எதிராக செயற்பட்டு, நிவாரணம் வழங்காமல், அவர்களின் உரிமைகளை மீறும் வகையில், முன்னாள் ஆளும்தரப்பின் கொள்கைகளின்படி செயற்பட்டு முடிவுகளை எடுக்கும் அரச அதிகாரிகளுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது.

கடந்த காலத்தின் ஆளும்தரப்பில் காணப்பட்ட பழைய நடைமுறைகளை அகற்றுவதில் அவர்களுக்கு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவர்கள்மக்களின்ஆணையின்அளவையும் தன்மையையும் உணரவில்லை. முந்தைய ஆளும்தரப்புகளில் அவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர் என்பதை அவர்கள் உணர்வது கடினமான காரியமாகிறது.

கடந்தகாலங்களில்அரசஅதிகாரிகள்மக்களின்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு, தேசியபொருளாதாரம், உள்ளூர்தொழில்கள் போன்றவற்றை வலுப்படுத்தும் முடிவுகளை எடுக்கவில்லை. மாறாக வெளிநாட்டு சக்திகள், இறக்குமதியாளர்கள் மற்றும் சர்வேதச நிறுவனங்களை வலுப்படுத்தும் முடிவுகளை மட்டுமே எடுத்துள்ளனர். அதற்கேற்ப வரிக் கொள்கைகளை அவர்கள் எடுத்துள்ளனர்.

அந்த தீர்மானங்கள் திட்டங்கள் சம்பந்தமாக அரச அதிகாரிகள் இன்னும் எங்களுடன் வாதிடுகின்றனர். அவர்கள் எடுத்த முடிவுகளுக்காக எங்களுடன் சண்டையிடுகிறார்கள். தற்போது நாம் நிதி அமைச்சு வரிக் கொள்கை போன்றவற்றுடன் போராடவேண்டியுள்ளது'' என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரின் கருத்தில் உண்மை இருந்தாலும் அது ஒரு நகைமுரணையும் ஏற்படுத்துகின்றது. பொருளாதார மறுமலர்ச்சி விடயத்தில், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களையும் கொள்கைகளையும் அப்படியே தொடரும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு முன்னாள் ஆளும்தரப்பின் கொள்கைகளைத் திட்டங்களைப் பின்பற்றும் அரச அதிகாரிகளை மட்டும் கடிந்துகொள்வது எந்த வகையில் நியாயமானது.

இலங்கையில் இதுவரை நிலவி வந்த முதலாளித்துவப் பொதுவுடமைப் போக்கிலிருந்து நேர்மையான பொதுவுடமையை நோக்கிச் செல்லும் மாற்றுக் கொள்கைகளையும் வெளிப்படுத்தல்களையும் திட்டங்களையும் இதுவரை தெளிவாக முன்வைக்காத ஆளும்தரப்பு முன்னைய ஆட்சிகளின் கொள்கைகளை அதிகாரிகள் பின்பற்றுகிறார்கள் என்று எப்படிக் குறை சொல்ல முடியும்?

முதலில் கடந்த கால ஆட்சியாளர்களின் கொள்கைகள் திட்டங்களில் இருந்து வெளியேறி தமக்கான கொள்கைகள் திட்டங்களை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு முன்வைக்கவேண்டும். மக்களுக்கு நன்மையளிக்கும் வகையிலானமக்கள்நோக்கிலிருந்தானஅந்தக்கொள்கைகளும் திட்டங்களும் செயல்நிலைக்கு வரும்போதுதான் முன்னைய ஆட்சியின் கொள்கைகள், செயற்பாடுகளில் இருந்து அரச அதிகாரிகளாலும் விடுபடக்கூடியதாக இருக்கும்.



# அயர்லாந்தில் தூதரகத்தை மூடிய இஸ்ரேல் டெல் அவிவுக்கு எதிராக சர்வதேச நாடுகள்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இஸ்ரேலுக்கு எதிரான தீவிரமான கொள்கைகள் காரணமாக அயர்லாந்தில் உள்ள தூதரகத்தை மூடியதாக 15 டிசம்பர் 2024 டெல் அவிவ் அரசு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் அரசின் காசா படுகொலைகளை கண்டித்து, கடந்த நவம்பர் 9, 2024 அன்று அயர்லாந்தின் டப்ளினில் பாலஸ்தீனிய ஆதரவு ஆர்ப்பாட்டத்தில் பெருமளவு பொது மக்கள் அணிவகுத்துச் சென்றனர். இதனை அயர்லாந்து அரசு தடுக்காமல், மேலும் இஸ்ரேலிய விரோதப் போக்கை கடைபிடித்து வருகிறது என்று குற்றம் சாட்டியுள்ளது.

பாலஸ்தீனிய அரசை அங்கீகரித்தல் மற்றும் காசாவில் அதன் போருக்கு எதிரான சர்வதேச சட்ட நடவடிக்கைக்கு ஆதரவு உள்ளிட்ட அயர்லாந்து அரசாங்கத்தின் 'தீவிர இஸ்ரேல் எதிர்ப்புக் கொள்கைகள்' காரணமாக ஞாயிற்றுக்கிழமை, டிசம்பர் 15 தொடக்கம்இஸ்ரேல்தனதுடப்ளின்தூதரகத்தை மூடுவதாக அறிவித்தது.

மே மாதம் பாலஸ்தீன நாடு பற்றிய அயர்லாந்தின் முடிவிற்குப் பிறகு இஸ்ரேல் அதன் தூதரை திரும்பப்பெற்றது. மேலும்கடந்த வாரம்டப்ளின்சர்வதேசநீதிமன்றத்தில்(ஹூளீமூ) இஸ்ரேலை இனப்படுகொலை செய்ததாக குற்றம் சாட்டிய தென்னாப்பிரிக்காவின் வழக்கை ஆதரித்தபோது டெல் அவிவ் அரசு மேலும் கோபமடைந்தது.

டப்ளினில் உள்ள இஸ்ரேலின் தூதரகத்தை மூடும் முடிவு அயர்லாந்து அரசாங்கத்தின் தீவிர இஸ்ரேலுக்கு எதிரான கொள்கைகளின் அடிப்படையில்எடுக்கப்பட்டதுஎன்றுஇஸ்ரேலிய வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக அயர்லாந்து பயன்படுத்திய செயல்கள் மற்றும் யூத விரோதச் சொல்லாட்சிகள் யூத அரசை மேலும் கோபமடைய வைத்துள்ளது.

இரட்டைத் தரத்துடன் அயர்லாந்து இஸ்ரேலுடனான உறவில் ஒவ்வொரு சிவப்புக் கோட்டையும்தாண்டியுள்ளதுஎன்றுவெளியுறவு அமைச்சர் கிடியோன் சார் அறிக்கையில் கூறினார்.

ஆனால் அயர்லாந்து பிரதமர் சைமன் ஹாரிஸ், இந்த முடிவு மிகுந்த வருத்தமளிப்பதாகவும், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டத்திற்காக தனது நாடு எப்போதும் துணை நிற்கும் என்றும் கூறியுள்ளார்.

அயர்லாந்து இஸ்ரேலுக்கு எதிரானது என்ற கூற்றை நான் முற்றிலுமாக நிராகரிக்கிறேன். அயர்லாந்து அமைதி, மனித உரிமைகள் மற்றும் சர்வதேசச் சட்டத்திற்கு ஆதரவானது என்று அயர்லாந்து பிரதமர் சைமன் ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

### இரு நாடுகளின் தீர்வு:

அயர்லாந்து இரு நாடுகளின் தீர்வை விரும்புகிறதுமற்றும்இஸ்ரேலும்பாலஸ்தீனமும் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வேண்டும்.

12 மாதங்களுக்குள் பாலஸ்தீனப் பகுதிகளில் 'சட்டவிரோதமாக' இருப்பதை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று ஐ.நாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்று கொள்ள வேண்டும் என்று அயர்லாந்து பிரதமர் சைமன் ஹாரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேல் குடியேற்றங்கள் சட்டவிரோதமானது என ஐ.நா உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆனாலும் இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதாகவும், இஸ்ரேலில் உள்ள அயர்லாந்து தூதரகத்தை மூடும் திட்டம் எதுவும் இல்லை என்றும் அயர்லாந்து வெளியுறவு அமைச்சர் மைக்கேல் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

காசாவில் தொடரும் படுகொலைகள் பாரிய அளவில் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் அப்பட்டமானமீறலைப்பிரதிபலிக்கிறது. அங்கே இனப்படுகொலை செய்யப்படுகிறதா என்பதை உலக நீதிமன்றம் என்றும் அழைக்கப்படும் ஹூளீமூ தீர்மானிக்கும் அதே வேளையில், பாலஸ்தீனிய போராளிக் குழுவான ஹமாஸ் 2023 அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீதான பலமான தாக்குதலையும் கடுமையாக எதிர்த்து கண்டனஅறிக்கைவெளியிட்டதாகஅயர்லாந்து வெளியுறவு அமைச்சர் மைக்கேல் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

### இஸ்ரேலுக்கு ஆயுத தடை :

உலக நாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு ஆயுத தடை விதித்து வரும் வேளையில், போர்க்குற்ற விசாரணை அவசியம் என சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் ஆயுதங்கள் வழங்க பல நாடுகள் மறுப்பு தெரிவித்தாலும் இஸ்ரேலின் போர்க்குணாம்சம் இன்னமும் மாறவில்லை.

இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்யும் முடிவில் இருந்து விலகியுள்ள நாடுகளின் வரிசையில் இவ்வருட தொடக்கத்தில் பிரித்தானியாவும் இணைந்தது.

இதனைப் போலவே, கடந்த ஜனவரி மாதம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்ட இத்தாலி, புதிதாக இஸ்ரேலுக்கு எந்த ஆயுத ஒப்பந்தமும் முன்னெடுக்கப்படாது, ஆனால் அக்டோபர் 7ம் திகதிக்கு முன்னர் ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் அமுலில் இருக்கும் எனக் குறிப்பிட்டது.

பல வருடங்களாக இஸ்ரேலுக்கு இராணுவ உபகரணங்களை வழங்கும் மூன்றாவது பெரிய நாடாக இத்தாலி உள்ளது. தற்போது ஸ்பெயின் நாடும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என ஜனவரி மாதம் அறிவித்தது. ஸ்பெயின் அரசு வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேலுக்கு ஆயுதங்களுடன் செல்லும் கப்பல்களும் தங்கள் துறைமுகத்தை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க முடியாது எனவும் அறிவித்தது.

இவ்வருட மார்ச்மாதத்தில்இருந்துகனடாவும் இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்வதை நிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குக

## வடக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் சனிக்கிழமை தனியார் பஸ் ஒன்று சாரதிகளுக்கான நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவலாக காணொளிகள் பகிரப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறான சாரதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு வட மாகாண தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தவிசாளர் க.மகேஸ்வரனை வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

# கல்முனை சாஹிரா மீண்டும் தேசிய மட்டத்தில் சாதனை.

(நூருல் ஹுதா உமர்)

திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் கலாசார அமைச்சால் அண்மையில் நடத்தப்பட்ட தேசிய மட்ட கலாசார போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரி (தேசிய பாடசாலை) ரபான் நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தை பெற்று கல்லூரிக்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளனர்.

இப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், மாணவர்களை வழிப்படுத்தி பயிற்றுவித்த ஆசிரியர் எம்.ஐ.எம்.அமீர் அவர்களுக்கும், கல்லூரியின் அதிபர் எம்.ஐ.ஜாபீர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் மகிழ்ச்சியுடன் வரவேற்று பாராட்டி கௌரவித்தனர்.

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு சீன உலர் உணவுப் பொதிகள்

## திருகோணமலையில் தூதுவர் வழங்கினார்



சீன அரசாங்கத்தால் 'சீனாவின் சகோதர பாசம்' என்ற தொனிப்பொருளில் திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

சீன தூதுவர் சீன்கொன் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து இப்பொதிகளை வழங்கி வைத்தார்.




திருகோணமலை மாவட்டத்தில் 700 பேருக்கு தலா 6500 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்தில் வைத்து 200 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களுக்கு பிரதேச செயலகங்களின் ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இந்நிகழ்வில் சீனத்தூதுவர் சீன்கொன் மற்றும் அவரது குழுவினர், அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, மேலதிக அரசாங்க அதிபர் சுதாகரன், அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் சுகுணதாஸ், ஆளுநரின் செயலாளர் அருள்ராஜ், ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் இராஜசேகர், பிரதேச செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகளும் பயனாளிகளும் கலந்துகொண்டிருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# காத்தான்குடியில் டெங்கு தீவிரம்

## 30 பேர் பாதிப்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் டெங்கு நோயால் 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யூ.எல்.நஸீர்தீன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பிரதேசங்களில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பல இடங்களில் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ். முரளீஸ்வரனின் வழிகாட்டலில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வேகமாக டெங்கு நோய் பரவி வருவதால் அவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் இப்பாரிய வேலைத்திட்டம்ஏற்பாடுசெய்யப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யூஎல்.நஸ¬ர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி நகர சபை பிரதேசத்துக்கு உட்பட்ட புதிய காத்தான்குடி உட்பட பல்வேறு இடங்களில் 15 பிரிவுகளாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரிக்கப்பட்டு





தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இப்பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருவமழை ஆரம்பித்திருப்பதால் மாவட்டத்தில் மேலும் பெருமளவில் டெங்குபரவும்அபாயம்ஏற்பட்டிருப்பதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நஸீர்தீன் மேலும் தெரிவித்தார்.

# இரண்டு பேருக்குமேல் ஒரு மோட்டார் சைக்கிளில் செல்வதைத் தவிர்க்குக

## நிந்தவூர் பொலிஸார் வேண்டுகோள்

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதால் பின்வரும் நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றுமாறு நிந்தவூர் போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரு மோட்டார்சைக்கிளில்இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே இதனை கருத்தில் கொண்டு கட்டாயம் இரண்டு பேருக்கு மேல் மோட்டார் சைக்கிளில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

சிறுபராயத்தினர் மற்றும் முறையான சாரதி அனுமதிப்பத்திரம் அற்றவர்களுக்கு மோட்டார் சைக்கிளை ஓட்டுவதற்கு வழங்குகின்றவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

தலைக்கவசம் இன்றியும் அதிக வேகத்துடனும் மோட்டார் சைக்கிளை ஓட்டி செல்வதை முற்றாக தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

## நீந்திக்கடந்த நெருப்பாற்றின் பிதாமகன்

# ஈழத் தமிழ் எழுத்துலகின் ஒரு சரித்திரம் சாய்ந்தது

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர், நடிகர், சிந்தனையாளர், பின்னணி குரல் கலைஞர், பல புத்தகங்களை எழுதியவர் என பன்முக ஆற்றலைக் கொண்ட நா.யோகேந்திரநாதன் இவ்வுலகை விட்டு ஞாயிற்றுக்கிழீழமை பிரிந்தார்.


இறுதிப் போரின் வலிகளைச் சுமந்த வரலாற்றைப்படைத்த மூத்த படைப்பாளர் நா.யோகேந்திரநாதனின் 'நீந்திக்கடந்த நெருப்பாறு' நாவல் அண்மையில் சிறிலங்கா அரசின் அச்சுறுத்தலுக்கும் உள்ளானது.

போர்க்காலத்தில் எழுத்தாளராகவும் ஊடகவியலாளராகவும் பணியாற்றிய நா. யோகேந்திரநாதன், புலிகளின் குரல் நாடகங்கள் வழியாகவும் பிரபலமாக அறியப்பட்டார்.

இவர் இறுதி யுத்த அனுபவத்தை பல பாகங்களாக நீந்திக்கடந்த நெருப்பாறு என்ற நாவலாக எழுதியமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதிய '34 நாள்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு' நாவல் வெளியீட்டு விழா கிளிநொச்சியில் இவ்வருட ஆரம்பத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், அவ் அமைப்பின் தலைவரும் ஈழத்து எழுத்தாளருமான தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் , ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதனின் நாவலுக்கு கிளிநொச்சியில் மகத்தான வரவேற்பு




கிடைத்தது.

விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போரான குடாரப்பு தரையிறக்கம் குறித்த இந்த நாவல் வெளியீட்டில் அரங்கம் நிறைந்த மக்கள் வருகை தந்தனர். மக்களின் மகத்தான வரவேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவலின் அனைத்துப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன என்பது உண்மையான படைப்பாளிக்கு கிடைக்கும் கௌரவச் சான்றாகும்.

மூத்த எழுத்தாளருக்கு மதிப்பளிப்பு:

இதேவேளை இந்நிகழ்வில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன்



அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மதிப்பளிப்பு செய்யப்பட்டது.

இறுதி யுத்தம் குறித்த இந்த நாவல் மன்னாரில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையான துயரப் பயணத்தை பதிவு செய்துள்ளது. இதுவரையில் நீந்திக் கடந்த நெருப்பாறு நாவலானது இரண்டு பாகங்கள் வெளிவந்துள்ளன.

இறுதிப் பாகமான மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு வெளியிடப்பட்டது. போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இந்த நூல் ஈழத் தமிழ் மக்களின் சோக வரலாற்றை மீண்டும் நினைவுபடுத்துகின்றது.

இந்த நிகழ்வில் படைப்பாளிகள், அரச ஊழியர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் எனப் பலரும் திரண்டு கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

ஓர் எழுத்தாளன் இறந்துபோயினும் அவர்தம் எழுத்துக்கள் என்றும் உயிர்ப்புடன் வைத்திருப்பது அவரின் படைப்புக்களாகும். மகாதேவா ஆச்சிரமம் சைவச் சிறுவர் இல்லம் 2012, 34 நாள்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு, இடிபடும் கோட்டைகள், இமயம்: விருதுபெற்ற நாயகனை நெஞ்சாரப் பாராட்டி விரியும் வாழ்த்து மலர், காட்டு நிலா (வானொலி நாடகங்கள்), நீந்திக்கடந்த நெருப்பாறு, பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை நீந்திக் கடந்த நெருப்பாறு, மரண மழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு ஆகிய படைப்புகளை மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சியின் மைந்தனும், முன்னர் திருவையாறு உப தபாலதிபருமாக இருந்தார். போராட்ட காலத்தின் பதிவுகளை சிறப்பாக வெளிக் காட்டிய நா யோகேந்திரநாதன் அவர்களின் பங்களிப்பு ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பைத் தந்துள்ளது.

### தென்கொரிய விமான விபத்தில் உயிரிழந்தோருக்கு

# அயலுறவு அமைச்சு இரங்கல் தெரிவிப்பு

தென் கொரியாவின் முவான் விமான நிலையத்தில் ஜெஜு ஏர் விமானம் 7சி 2216 விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்கள் குறித்து ஆழ்ந்த கவலையடைவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை அரசு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த இழப்பை சமாளிக்கும் தைரியம் அவர்களுக்கு கிடைக்கட்டும்.

காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# 60 மருந்தகங்களின் உரிமங்கள் 5 மாதங்களில் இடைநிறுத்தம்

கடந்த 5 மாதங்களில் 60 மருந்தகங்களின் உரிமங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை தெரிவித்துள்ளது

நாடளாவிய ரீதியில் மருந்தகங்களின் செயற்பாடுகள் மற்றும் ஏனைய தர விடயங்களை ஆராய்ந்த நிலையிலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த மருந்தகங்களின் குறைபாடுகள் மீண்டும் பூர்த்தி செய்யப்படும் வரையில் செயற்பாடுகளுக்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து மருந்தகங்களினதும் நிலைமைகள் தொடர்பில் அண்மைய நாள்களில் தீவிரமான கண்காணிப்பு ஆய்வுகள் நடத்தப்படுவதாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# தகுதி வாய்ந்த மருந்தாளர்கள் இன்றி புதிய மருந்தக பதிவுகள் அவசியமா?

### ஒழுங்குபடுத்தும் அதிகார சபைத் தலைவர் கேள்வி

புதிய மருந்தகங்களை திறப்பதற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றநிலையில்தகுதிவாய்ந்தமருந்தாளர்கள் இல்லாமல் மருந்தகங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமா என்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம கேள்வி எழுப்பியுள்ளார்.

மருந்தாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை பொறுப்பல்ல என்றும் அதன் தலைவர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில் -

சில சந்தர்ப்பங்களில், மருந்தாளர்கள் போதுமான ஊதியம் இல்லாததால் மருந்தகங்களில் அவர்கள் பணியாற்றுவதில்லை. புதிய மருந்தகங்களை நிறுவுவதற்கு அடிக்கடி விண்ணப்பங்கள் வருவதற்கு இதுவே காரணமாக இருக்கின்றன.

தரநிலைகளைப் பராமரிக்கவும், பொதுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் மருந்தகங்கள் தகுதிவாய்ந்தநிபுணர்களைக்கொண்டிருப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும். - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## மியன்மார்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, ஆணைக்குழுவின் அதிகாரிகள் தடையின்றி குறித்த அகதிகளிடம் செல்வதற்கு வசதியாகதகுந்தஉத்தரவுகளைபிறப்பிக்குமாறு முப்படைகளின் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## சிகிரியாவைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய கலாசார நிதியத்திற்கும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 27ஆம் திகதி புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது

## செலவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கல்கள் இருப்பின் அது குறித்தும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

இதற்கமைய, தேர்தல்கள் ஆணைக்குழு அல்லது பொலிஸாரிடம் அது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

# 75 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி தனியார் துறையினர் இறக்குமதி

## அரச தரப்பு அரிசி இறக்குமதி செய்வதில் தொடர்ந்து இழுபறி

அரிசி இறக்குமதிக்கான வரையறை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ள பின்னணியில் தனியார் துறையினர் 75 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளனர். இருப்பினும் சந்தையில் பச்சையரிசிக்கான தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள போதிலும் முதல் தொகையான 5200 மெற்றிக் தொன் அரிசி 2024.12.24ஆம் திகதியன்று இறக்குமதி செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் இதுவரை அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு குறுகிய கால தீர்வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

அத்துடன் அரிசி இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த வரையறையை தற்காலிகமாக இரத்து செய்து தனியார் துறையினர் அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

தனியார் துறையினர் அரிசி இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் 2024.12.20ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் தனியார் துறையினர் முன்வைத்த கோரிக்கைக்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் தனியார் துறையினர் 75 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்துள்ளனர். இதில் 43 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டரிசியும், 32 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்துள்ளதாகவும், பரிசோதனையின் பின்னர் அவை விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் சுங்கத் திணைக்களத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையிலும் சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

கட்டுப்பாட்டு விலையில் காணப்படும் சிக்கலால் சில்லறை வியாபாரிகள் அரிசியை கொள்வனவு செய்வதை தவிர்ப்பதாக புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதாக அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. அதன் முதல் தொகையாக 5200 மெற்றிக் தொன் அரிசி 2024.12.16ஆம் திகதி இறக்குமதி செய்வதாக வர்த்தகம் வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டிருந்த நிலையில் இதுவரை அரச தரப்பில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை.




# பாதுகாப்புப் படை பதவி நிலைப்பிரதானி பதவியிலிருந்து சவேந்திர சில்வா ஓய்வு

ஜெனரல் சவேந்திர சில்வா பாதுகாப்புப் படைகளின் பதவி நிலைப்பிரதானி பதவியிலிருந்து 2025 ஜனவரி 01ஆம் திகதி முதல் ஓய்வு பெறவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சவேந்திர சில்வாவின் சேவைக் காலத்தை கடந்த ஜூன் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நீடித்திருந்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19ஆம் திகதி முதல் 2022 மே 31 வரை ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத்தளபதியாக பணியாற்றினார்.

அதன் பின்னர், தனது பதவிக்காலம் நிறைவடைய, 2022 ஜூன் முதலாம் திகதி பாதுகாப்புப்படைகளின்பதவிநிலைபிரதானியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே அவரது பதவிக்காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

அதனையடுத்து, தற்போது புதிய அரசாங்கம் அமைந்திருக்கும் நிலையில் இவரது ஓய்வு தொடர்பில் தகவல் வெளியாகியிருக்கிறது.



# வயலில் நோய்வாய்ப்பட்டு கிடக்கும் யானைக் குட்டி

மட்டக்களப்பு காவத்தமுனை வாகனேரி வயல்வெளி பிரதேசத்தில் நோய்வாய்ப்பட்ட நிலையில் 6 வயது மதிக்கத்தக்க காட்டு யானைக் குட்டியொன்று நேற்று (ஞாயிற்றுக்கிழஷ்) நோய்வாய்ப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்ட நிலையில் காணப்பட்ட யானைக் குட்டி தொடர்பாக உள்ளூர் விவசாயிகளால் கிரான் பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர்.

கடந்த வாரம் முதல் இவ்வயல் பகுதியில் தனிமையில் அலைந்து திரிந்த இந்த யானை உடல் மெலிந்து உணவு உட்கொள்ள முடியாத நிலையில் பலவீனமுற்ற நிலையில் காணப்பட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை காவத்தமுனை, மஜ்மா நகர் மற்றும் நாவலடி ஆகிய பிரதேசங்களில் யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக காணப்படுவதாகவும் அவற்றிலிருந்து தங்களை பாதுகாப்பதற்கு யானை வேலிகளை அமைத்துத் தருமாறு பிரதேசவாசிகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# தொடருந்து மோதி யானை உயிரிழப்பு

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்றுகொண்டிருந்த புலதிசி கடுகதி ரயிலில் மோதி காட்டு யானை ஒன்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள மின்னேரிய தேசிய வனப் பூங்கா அதிகாரி தெரிவித்தார்.

கிழக்கு ரயில் வீதியின் ஹபரனை ரயில் நிலையத்துக்கும் கல்ஓய சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் யானை உயிரிழந்து கிடப்பதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் 12 - 15 வயதுக்குட்பட்ட (எத்தின்ன) பெண் காட்டுயானையே உயிரிழந்துள்ளது.

ரயிலில் மோதிய யானைக்கு வன ஜீவராசிகள் திணைக்கள மிருக வைத்தியர்களால் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டபோதிலும் யானை உயிர் பிழைக்கவில்லை.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் வனஜீவராசிகள் திணைக்கள மின்னேரிய அலுவலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2024இல் வெளியிடப்பெற்றது